செ.வெ.எண்: 02/ஏப்ரல் நாள்: 01.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு, தேர்தல் பறக்கும் படை குழுவினர்களின் வாகன தணிக்கை பணிகளையும்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று (01.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு, தேர்தல் பறக்கும் படை குழுவினர்களின் வாகன தணிக்கை பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தல்-2016-ஐ முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து பல்வேறு வாக்ககாளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமக்குடி அரசு மருத்துவமனையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள் சிகிச்சைக்காக வருகை தந்த பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடர்ந்து பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கமுதக்குடி கிராமத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள் தலைமையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அதன் பின்பு கமுதக்குடியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள், மாணவியர்கள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, பெற்றோர்களிடமிருந்து கையொப்பம் பெறுவதற்கான வாக்காளர் உறுதிமொழி படிவத்தினையும் மாணவிகளுக்கு வழங்கினார்.

மேலும் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவித்திட ஏதுவாக, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் தேர்தல் பறக்கும் படை குழுவினர்களுக்கான தனி கைபேசிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் வழங்கி தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் மேற்கொண்டு வரும் வாகன சோதனைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வாகன சோதனையில் விழிப்புடன் ஈடுபட்டு அனைத்து வாகனங்களையும் பாரபட்சமின்றி தணிக்கை செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (பரமக்குடி சார் ஆட்சியர்) மரு.கி.சு.சமீரன், இ.ஆ.ப., இணை இயக்குநர் மருத்துவபணிகள் மரு.சகாயஸ்டீபன்ராஜ், துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.மீனாட்சி, பரமக்குடி வட்டாட்சியர் திரு. .செய்யது முகமது உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**